# களபூமிகலையகம்

## களபூமி, காரைநகர்

“கல்வியுடன் கலைவளர்த்து வாழ்வினில் வளம் பெறுவீர்”

**Est: 27 July 2013**

பதிவு இல: வட.மா.க.அ..பண்/யாழ்/காரை 2014/01

அரச பதிவு இல: **CD/04/09/01/02/JAF/025**

திகதி: Nov. 2018

கனடாவாழ் காரைநகர்/களபூமி மக்களுக்கு

அன்புடையீர்

களபூமி கலையகத்திற்குக் கட்டிடம் அமைப்பதற்குத் வேவையான நிதி விடயமாக இக்கடிதத்தினை வரைகின்றோம். புலம்பெயர் மக்கள் முன்பு உதவிகள் செய்து கால்நடை வைத்தியசாலை, ஆயள்வேத (சித்த) வைத்தியசாலை, களபூமி ஒழுங்கைகளை ஒளிமயமாக்கல் போன்ற திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கு முழு ஆதரவுகளை வழங்கி ஊக்குவித்தார்கள். அவற்றின் பயனை அனைத்து காரைநகர் மக்களும் அனுபவிக்கின்றார்கள். அதேபாணியில் களபூமி கலையகத்தினை ஒரு குறிச்சி பேதமும் இன்றி காரைநகர் மக்கள் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் உருவாக்கவுள்ளோம். தாங்கள் புலம் பெயர்ந்ததினால் தங்கள் வருங்கால சந்ததிகளின் வாழ்க்கை சிறப்புற அமைவது நிச்சயம் ஆனால் ஊரிலிருக்கும் நம் சிறார்களுக்கு நல் வழிகாட்டுவதற்கு ஒரு நிரந்தரமான கட்டிடத்தில் அவர்களுக்கேற்ற முறையில் கலை, கலாச்சார முன்னேற்றங்களுக்கு வழிகாட்டுவது எமது

தலையாய கடமையாகும்.. ஆகவே தங்கள் ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் நாடுகின்றோம். இப்பணிக்கு நிதியுதவி வழங்க முன்வருபவர்கள் தயவு செய்து இலங்கை வங்கி (காரைநகர் கிளை) யிலுள்ள **இலக்கம் 75680501** றினைக் கொண்ட சேமிப்புக்கணக்கில் பணத்தினைச்செலுத்தவும் பணம் வங்கியில் இடப்பட்டதும் email மூலமாக பதில் அனுப்புவதுடன் பற்றுச் சீட்டும் வழங்கப்படும். ஆகவே தயவு செய்து நிதி வழங்குவோர் தங்கள் email விலாசத்தினையும் தயவுசெய்து தெரியத்தந்தால் உதவியாக இருக்கும்.

மேலும் எமது மக்கள் பல நாடுகளிலும் புலம் பெயரந்திருப்பதனால் அந்தந்த நாடுகளில் ஒருங்கிணைப்பாளர்களை நியமித்து அவர்கள் மூலமாக நிதியினைச் சேர்த்து வழங்கினால் நிர்வாகம் சுலபமாக இருக்கும் என்று கருதுகின்றோம். ஆகவே தயவு செய்து இப்பணிக்கு உதவ முன்வருவோர் தயவு செய்து களபூமி கலையக நிர்வாகத்திற்குத் தெரியத்தரவும். கலையகத்திற்கென ஒரு email விலாசத்தினை உருவாக்கி அதன்மூலமாக விரைவில் தொடர்பு கொள்வோம். அதுவரையில் pamasi@yahoo.co.uk எனும் email மூலமாக த் தொடர்பு கொள்ளவும்.

நன்றியுடன்

களபூமி கலையக நிர்வாகம்